# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● டிசம்பர் 10 2022

Weekly E-paper ● December 10, 2022




## சென்னை மழையும், திமு கழக ஆட்சியும்!

வழக்கறிஞர் அருள்மொழி

## குஜராத்-இமாச்சலத் தேர்தலும், திராவிட மாடல் தேவையும்!

காசு. நாகராசன்

## சொல் வேறு; செயல் வேறு!

தலையங்கம்

## அண்ணன் சீமானுக்கு ஒரு மடல்!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● டிசம்பர் 10 2022 Weekly E-paper ● December 10, 2022


# சென்னை மழையும், திமு கழக ஆட்சியும்!

**வழக்கறிஞர் அருள்மொழி**



ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் சென்னையில் இருமுறை கனமழை பெய்யும் . ஒன்று பருவமழை மற்றது புயல் மழை. 37 ஆண்டுகளாக சென்னையில் வசிக்கும் எனக்கு ஒவ்வொரு மழையும் புதுப்புது அனுபவத்தைத் தந்து சென்றிருக்கிறது.

1985 முதல் 1988 ஆம் ஆண்டு வரையில் அண்ணா மேம்பாலத்திற்குக் கீழாக, தியாகராயநகருக்குச் செல்லும் ஜி.என் சாலையில் பலமுறை சென்றிருக்கிறேன். இடுப்பளவு மழைநீர் தேங்கி நிற்கும். கார், ஆட்டோ, ஸ்கூட்டர், பைக் என வகை வகையாக வண்டிகள் தண்ணீரில் நிற்க அவற்றின் உரிமையாளர்கள் நீரில் இறங்கி வண்டியைத் தள்ளித் தத்தளித்துக் கொண்டிருப்பார்கள். அப்போது பெரும்பாலான கார்கள் அம்பாசிடரும், ஃபியட்டும்தான். அந்த நேரத்தில் அருகில் இருந்த ஒரு குடிசைப் பகுதியில் இருந்து சில பெரியவர்களும், சிறுவர்களும் வந்து வண்டியை மழைநீர் தேக்கத்தில் இருந்து மேலே கொண்டுவர உதவி செய்வார்கள். அவர்களுக்கும் கொஞ்சம் வருமானம் கிடைக்கும்.

ஆனால் ஒன்று அந்த நடுத்தரமோ உயர்தரமோ மறந்தும்கூட அவர்கள் யாரும் அப்போது முதல்வராக இருந்த எம் .ஜி. ஆர் அவர்களையோ, அ.தி.மு.க ஆட்சியையோ திட்டியதில்லை. அதேபோல் மைலாப்பூர் பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலும் கச்சேரி சாலையிலும், சாந்தோம் நெடுஞ்சாலையின் பல இடங்களிலும் மழைநீர் தேங்கிய போது யாரும் ஜெயலலிதாவைக் குறை கூறிக் கேட்டதில்லை. 'Corporation Employees Worst' என்று மாநகராட்சி ஊழியர்களைத்தான் திட்டுவார்கள். ஆட்சி மாறியபின் அவற்றை சரிசெய்த கலைஞரையோ, திமுக ஆட்சியையோ பாராட்ட மறுப்பதோடு தேடித்தேடி குறையும் சொல்வார்கள்.



அவர்களின் இந்த முணுமுணுப்புதான் அரசியல் பிரச்சாரமாக அடுத்தடுத்த நிலையில் வாழும் மக்களிடம் எதிரொலிக்கும்.

இந்த நுட்பமான அணுகுமுறை தெரிந்த அவர்கள்தான் கடந்த பத்தாண்டுகளாக மழைக்காலத்தில் அவர்கள் உட்பட சென்னை மக்கள் பட்ட துயர்களை மறந்துவிட்டு இந்த ஓராண்டில் திமுக ஆட்சியில் நடைபெற்றுள்ள முன்னெச்சரிக்கைப் பணிகளையும், போர்க்கால நடவடிக்கை என்றால் என்ன என்பதை அறியாத நமக்கு முதல்வரின் தலைமையில் அமைச்சர்களும், அதிகாரிகளும், மேயரும் சட்டமன்ற உறுப்பினர்களும், கவுன்சிலர்களும், மாநகராட்சி ஊழியர்களும் போர்க்களத்தில் இருப்பதைப்போல் சுழன்று சுழன்று பணியாற்றுவதைப் பார்த்தபின்பும், இவர்களால்தான் இன்று நாம் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறோம் என்ற நன்றி சிறிதும் இன்றி, 'எங்கேயாவது கொஞ்சம் நீர் தேங்காதா' என்று புகைப்படம் எடுக்கத் தேடி அலைகிறார்கள். எதுவும் கிடைக்காவிட்டால் பழைய படங்களையே பதிவிட்டு பொய்க்குற்றம் சுமத்துகிறார்கள். இன்னும் சிலர் ' மழை அதிகமாகப் பெய்யவில்லை, அதனால்தான் தண்ணீர் தேங்கவில்லை' என்றும் பேசி தங்கள் வன்மம் குறைந்து விடாதபடி பார்த்துக் கொள்கிறார்கள்.

ஏனெனில் அவர்கள் மனதில் நிரந்தரமாக இருப்பது ஜாதி மத வேற்றுமையும், வெறியும்தான். மக்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையைத் தரும் ஒரு ஆட்சியைவிட தங்கள் சுய விருப்பு வெறுப்புதான் முக்கியம் என்பதுதான் அவர்களது மனப்பான்மை.

இந்தக் கொடிய மனிதர்களுக்கும் சேர்த்து தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றும் அரசு, மாநகராட்சி ஊழியர்களை நன்றியுடன் பாராட்டுவோம்.

வியப்பிற்குரிய முறையில் செயலாற்றும் இந்த தமிழ்நாட்டின் முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களை இந்த நேரத்திலும் கேலி செய்து தங்கள் மூளையை சொறிந்து புண்ணாக்கிக் கொள்பவர்களுக்கு மருத்துவம் செய்யும் வசதி இன்னும் வரவில்லை.

திமுக ஆட்சியின் தேவையை மக்கள் உணர்வதே உண்மையான முதன்மையான வெற்றி.!

**( முகநூல் பக்கத்தில் இருந்து ஒரு பகுதி)**

# குஜராத்-இமாச்சலத் தேர்தலும், திராவிட மாடல் தேவையும்!

காசு. நாகராசன்



இமாச்சலப் பிரதேசம் மற்றும் புதுடில்லி மாநகராட்சி ஆகியவற்றில் ஆட்சியை இழந்தது பாஜக. 7 இடைத் தேர்தல்களிலும் பாஜக படுதோல்வி.

கள்ள ஓட்டு, மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் வெறுப்பு அரசியல் காரணமாக குஜராத்தில் மட்டும் ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது பா.ஜ.க.

இப்படித்தான் நேர்மையமாகச் செய்திகள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் . ஆனால், பாஜகவை இன்னமும் இந்த மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதைப் போல ஒரு கற்பனையைத் தலைப்புச் செய்திகளாக்கி மகிழ்ந்திருக்கின்றன ஊடகங்கள். ஊடகங்களின் இந்த மகிழ்ச்சி ஆபத்தானது. இது, ஜனநாயகத்தின் வீழ்ச்சி.

குஜராத் ஆட்சி தக்கவைப்பு குறித்த மோடியின் பேச்சை எட்டு காலம்ன் செய்தியாகப் போட்டிருக்கிற ஊடகங்கள் இமாச்சல வெற்றி குறித்த ராகுலின் அறிக்கையை எட்டு வரிகளில் கூடப் பதிவு செய்யாதது எவ்வளவு பெரிய இருட்டடிப்பு...? எவ்வளவு பெரிய மோசடி...?

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமெனில் இந்திய ஒன்றிய அளவிலான ஒரு கூட்டமைப்பு கட்டமைக்கப்பட்டே தீரவேண்டும்.

சங் பரிவார் கும்பலின் இலக்கு வர்ணாஸ்ரம மநுதர்ம ஆட்சி. அதற்கு வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்று சொல்லலாமே தவிர வாய்ப்பே இல்லை என்று சொல்லிவிட முடியாது என்பதே எதார்த்தமான உண்மையாகும்.

ஒருவேளை அப்படியொரு அசிங்கமான நிலைமைக்கு இந்தியா தள்ளப்பட்டு விடுமானால் அதற்கு நிச்சயமாக மக்கள் அல்ல, இங்கேயுள்ள மக்கள் இயக்கங்கள்தான் காரணமாக இருப்போம் என்பதையும் நாம் நேர்மையோடே ஒப்புக்கொண்டாக வேண்டும்.



சங் பரிவார் கும்பலின் ஆசை நிறைவேறினால் கூட அது நிச்சயமாக நீண்டகாலத்திற்கு நிலைக்காது. இப்போதைய அறிவியல் உலகில் பழமைவாத அரசியல் அவ்வளவாகத் தாக்குப்பிடிக்க முடியாது என்பது வேறு. ஆனால் அதைச் சரிசெய்ய நாம் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டியது வரும்.

அதைத் தடுப்பதற்கு வழியே இல்லையா? இருக்கிறது! எளிய வழி இருக்கிறது! இப்போதே ஒரு ஜனநாயக ரீதியிலான மாற்று வழியை ஏற்படுத்துவதுதான் ஒரே தீர்வு. அது, ஒன்றிய அளவில் ஒரு ஜனநாயகக் கூட்டமைப்பைக் கட்டுவது. அது சாத்தியமா? என்றால் நிச்சயம் சாத்தியமே! கடந்த கால அனுபவங்கள் இந்த மாற்று வழி குறித்த அய்யத்தை நமக்குள் விதைக்கக் கூடும். அதுவும் இயல்பானதே.

ஆனால் இம்முறை சமூகநீதி - மாநில சுயாட்சி - மதச்சார்பின்மை - ஜனநாயகம் என்கிற கொள்கைகளை முன்னிறுத்தி ஒரு கூட்டமைப்பு கட்டப்படுமானால் அது ஒன்றிய அளவில் மிகப்பெரிய வரவேற்பைப் பெறும்... வெற்றியைத் தரும்.

இப்போதைக்கு இதற்கான வாய்ப்பும் தகுதியும் திமுகவிற்கே இருக்கிறது. திமுகவின் முன்னெடுப்பில் மட்டுமே பாஜக என்கிற வன்முறைக் குதிரைக்குக் கடிவாளம் போடமுடியும்.

இல்லையெனில் மத ரீதியாக மக்கள் பிளவு படுத்தப்பட்டு எதிர்காலத்தில் வன்முறை வெறுப்பு அரசியல் வெற்றிபெற்றே தீரும். அது ஜாதியப் பிரிவினைக்கும் வர்ணாஸ்ரம தர்மத்திற்கும் வழியேற்படுத்தும். நாம் பழமையை நோக்கித் தள்ளப்படுவோம். ஜனநாயகமும் சமூகநீதியும் அடியோடு புதைக்கப்படும். மக்கள் கொடுமைகளில் உழன்று... தலைமுறைகளை இழந்து... பின் போர்க்குணம் பெற்றுப் போராடி... தியாகங்கள் பல செய்து.... சமூக ஜனநாயக விடுதலையை அடைவார்கள் என்பது வேறு. ஆனால், அப்படிப்பட்டக் கடுமையான பின்னடைவை இந்தச் சமூகம் எதிர்கொள்ள இன்றைக்கு இருக்கிற சமூகநீதி, ஜனநாயக இயக்கங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதே நமது கவலை.

மக்களை அணிதிரட்டினால் எவ்வளவு பெரிய சர்வாதிகாரத்தையும் வீழ்த்த முடியும் என்பதே வரலாறு நமக்குச் சொல்லித்தரும் பாடம். நாம் நமது வரலாறுகளில் இருந்தே பாடம் கற்போம்! ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## சொல் வேறு; செயல் வேறு!

அம்பேத்கர் சிலைக்குக் காவி உடை அணிவிக்கமாட்டேன், விபூதி, குங்குமம் பூசமாட்டேன் என சென்னை உயர் நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளித்தார், இந்து மக்கள் கட்சியின் அர்ஜுன் சம்பத்.

டிசம்பர் 6ஆம் நாள் மாமேதை அம்பேத்கரின் நினைவு நாள். அந்நாளில் அம்பேத்கர் மணிமண்டபத்திற்குள் சென்று மாலையிடப் போவதாகவும், அப்போது தனக்குக் காவல்துறைப் பாதுகாப்பு வேண்டுமெனவும் நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்த போது, நீதிபதியிடம் மேற்கண்ட உறுதி மொழியை எழுத்து மூலம் கொடுத்துள்ளார் அவர்.

அம்பேத்கர் இந்து மதத்தை எதிர்த்தவர். இந்துவாகப் பிறந்தாலும், இந்துவாகச் சாக மாட்டேன் என்று பவுத்தத்திற்கு மாறியவர்.

அர்ஜுன் சம்பத் இந்து மக்கள் கட்சியின் தலைவர். இந்துத்துவாவைப் பேசி பிறரைப் புண்படுத்தி மத விரோதமாகச் செயல்படுபவர் அவர்.

அம்பேத்கரைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளாத அவர், இந்துத்துவத்தை ஏற்றுக்கொள்ளாத அம்பேத்கர் மணிமண்டபம் செல்ல வேண்டிய அவசியம் என்ன?

அதே நேரம் அம்பேத்கருக்குக் காவிச்சட்டை போட்டும், நெற்றியில் திருநீறுப்பட்டையும், பொட்டும் வைத்து ஒரு படத்தை சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளார், அவரின் இந்து மக்கள் கட்சியின் பொறுப்பாளர் குருமூர்த்தி என்பவர், கும்பகோணத்தில். அவரைக் காவல் துறை கைது செய்திருக்கிறது. இது நீதிமன்றத்தில் கொடுத்த உறுதிமொழிக்கு முரணானது.

இதன் மூலம் அர்ஜுன் சம்பத்தின் எண்ணம் புரிகிறது. அம்பேத்கரை அவர் மதிக்கவும் இல்லை, மரியாதை செய்வது அவரின் நோக்கமும் இல்லை.

மதவேறுபாடுகளை விதைத்து, மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் அவரின் உள்ளார்ந்த சிந்தனை, செயல்பாடுகள் கண்டனத்திற்கு உரியது.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் இவர் போன்றோரிடம் எச்சரிக்கையாக இருப்போம்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# டிசம்பர் 6
## அம்பேத்கர் நினைவு நாள்!

### திண்டுக்கல்



### ஈரோடு



### கூடுவாஞ்சேரி



### கோவை



# அண்ணன் சீமானுக்கு ஒரு மடல்!

**வணக்கம்**. அண்மையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடிய அறுவர் விடுதலை குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, தமிழக மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற வழிவகுத்துள்ளது. அத்தீர்ப்பினை வரவேற்று அவர்களுடைய விடுதலையில் அக்கறையுடைய பல்வேறு இயக்கங்களும், மனித உரிமை அமைப்புகளும் பேசியும், எழுதியும் வருகின்றன. நீங்களும் ஓர் அறிக்கையை விடுத்துள்ளீர்கள். மகிழ்ச்சி!

அந்த அறிக்கையில் அய்யா பழ. நெடுமாறன் தொடங்கி 30-க்கும் மேற்பட்ட பல்வேறு தலைவர்களுக்கும், உணர்வாளர்களுக்கும், அமைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளீர்கள். ஆனால் அதில் கவனமாகத் தவிர்க்கப்பட்டுள்ள பெயர்கள் இரண்டு. ஒருவர் முத்தமிழறிஞர் கலைஞர், மற்றொருவர் பேராசிரியர் சுபவீ. இவர்கள் இருவரும் ஈழம் தொடர்பாகவும், எழுவர் விடுதலை தொடர்பாகவும் ஆற்றிய பங்களிப்பினை நாடறியும். ஏன், ஒரு காலத்தில் திராவிட இயக்க மேடைகளில், பயிற்சி பெற்ற நீங்களும் அறிவீர்கள். அப்படி இருந்தபோதிலும், இவ்விருவர் பெயரைச் சொல்வதிலிருந்து உங்களைத் தடுத்தது எது என்று தெரியவில்லை.

கடந்த 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் நாள் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் நடைபெற்ற மரண தண்டனை ஒழிப்பு மாநாடு சென்னை தியாகராயர் அரங்கில் நடைபெற்றது. நீங்களும் அதில் கலந்து கொண்டீர்கள். தோழர் தியாகு, தோழர் தொல். திருமாவளவன், கவிஞர் கனிமொழி, கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோருடன் மேடையைப் பகிர்ந்து கொண்டீர்கள். பேராசியர் சுபவீ அம்மாநாட்டில் நிறைவுரை ஆற்றினார். இராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் மீதான தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும் என்று அம்மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த மாநாட்டில் நீங்கள் என்ன பேசினீர்கள் என்பது உங்களுக்கு இப்போது மறந்து போயிருக்கலாம். எனவே நீங்கள் பேசியவற்றை அப்படியே கீழே தருகிறேன்.

“இந்தியாவில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் எவராவது பார்ப்பனர் இருந்திருந்தால் தூக்குத்தண்டனையை ரத்து செய்திருப்பார்கள். தூக்கு தண்டனையானாலும், ஆயுள் தண்டனையானாலும் சிறையை நிரப்பிக் கொண்டிருப்பவர்களானாலும் அதில் தொடர்புடையவர்கள் எல்லோரும் பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட மக்கள் என்பதால், இங்கே மனித உரிமைச் சட்டங்கள் திரும்பிப் பார்க்க மறுக்கின்றன.

மரணம் என்பது ஒரு முடிவு. அது எப்படி தண்டனை ஆகும்? உண்மையில் தூக்குத் தண்டனையில் தண்டிக்கப்படுபவர், தூக்கிலிடப்படுபவர் அல்ல. அவரது வாழ்க்கை முடிந்து விடுகிறது. ஆனால், அதில் தண்டிக்கப்படுவோர் தூக்கிலிடப்பட்டோரின் குடும்பத்தார்தான். இங்கே பேசிய தோழர் தியாகு தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டவர்தான், அவர் தூக்கிலிடப் பட்டிருப்பாரேயானால், மார்க்ஸ் எழுதிய ‘மூலதனம்’ என்ற பெரும் தொகுதி நமக்கு தமிழில் கிடைத்திருக்குமா? தூக்குத் தண்டனை என்பதே கடவுள் நம்பிக்கைக்கு எதிரானது. ஒருவன் கொலை செய்யப்படுவான் என்று ஆண்டவன் அவன் தலைவிதியை நிர்ணயித்து விட்டால், பிறகு கொலை செய்தவனை ஏன் தண்டிக்க வேண்டும். எல்லாம் ஆண்டவன் விதிப்படி நடக்கும் என்று நம்புகிறவன் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கூறுவதே ஆண்டவனுக்கு எதிரானது அல்லவா? நல்லவன் சொர்க்கம் போவான், கெட்டவன் நரகம் போவான் என்று நம்பிவிட்டால், பிறகு கடவுள் தண்டனையை மீறி இங்கே சிறைத்தண்டனை கொடு என்று உண்மையான பக்தர்கள் ஏன் கேட்கிறார்கள்.

ஒருவன் கொலை செய்யப்பட்டுச் சாவான் என்று தலையில் எழுதி வைத்த ஆண்டவனைத் தண்டிக்காமல், ஆண்டவன் விதித்த விதிப்படி செயல்பட்டவனை ஏன் தண்டிக்க வேண்டும்? தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற போராட்டத்துக்காக, தமிழ்நாட்டில் படையை உருவாக்கியவர் புலவர் கலியபெருமாள். அவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்தவர் நம் முதல்வர் கலைஞர். நக்சல்பாரி இயக்கத்தில் சேர்ந்து சாதிவெறி நிலப்பிரவுவை அழித்தொழிப்பு செய்த குற்றத்தின் கீழ் தூக்குத் தண்டனைக்கு உள்ளானவர் தோழர் தியாகு. அவரது தூக்குத் தண்டனையை ரத்து செய்தவரும் நம் தமிழ்நாடு முதல்வர் கலைஞர்தான். இந்த நிலையில் தமிழ்நாட்டில் பேரறிவாளன் உள்பட தூக்குத் தண்டனைக்கு உள்ளான எனது தமிழின சொந்தங்களை விடுதலை செய்யுமாறு நாங்கள் கலைஞரிடம் கோரிக்கை வைக்காமல் வேறு யாரிடம் கோரிக்கை வைக்கமுடியும்?”




03.12.2022 அன்று இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் நடைபெற்ற கலைவாணர் மற்றும் மீனாம்பாள் சிவராஜ் ஆகியோருக்கான புகழ்வணக்க நிகழ்ச்சியில், தோழர் ஜீவ சகாப்தன், தோழர் ஜனனி ஆகியோர் உரையாற்றினர்

ஆம்! இது நீங்கள் பேசிய உரைதான். கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் வாசித்துப் பாருங்கள். உங்களுக்கே வியப்பாக இருக்கலாம். அன்று இப்படி எல்லாம் பகுத்தறிவு பேசிய நீங்கள்தான் இன்று முப்பாட்டன் முருகனுக்குக் காவடி தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இது காலம் செய்த கோலமா இல்லை நீங்கள் போடும் வேடமா தெரியவில்லை.

அன்று திராவிட இயக்க மேடைகளில் கலைஞரின் புகழ் பாடியதும் நீங்கள்தான். என்ன செய்வது? அன்று திராவிடம் என்றால் இனித்தது. இன்று எட்டிக் காயாகக் கசக்கிறது. முருகனுக்குக் காவடி தூக்கியதைக் கூட மன்னித்து விடலாம். ஆனால் திராவிடத்தை அழித்து விடலாம் என்று கனவு காணும் சில முட்டாள்களுக்குக் காவடி தூக்குவதைத்தான் சகித்துக் கொள்ள முடியவில்லை.

உங்கள் அறிக்கையில் கலைஞர் அவர்களின் பெயரையும், சுபவீ அவர்களின் பெயரையும் தவிர்த்திருப்பதை உங்கள் எஜமானர்கள் ரசிக்கலாம். என்ன செய்வது; அவர்கள் கோபித்துக் கொண்டால் உங்கள் நிலைமை என்னவாகும்? ஆனால் இங்கு மக்கள்தான் எஜமானர்கள். வரலாறு தேவையான பெயர்களை நிச்சயம் நினைவில் கொள்ளும். இவ்விருவரின் பெயர்களும் உங்கள் அறிக்கையில் இடம்பெறாமலிருக்கலாம். ஆனால் எழுவர் விடுதலைக்கான நெடிய போராட்டத்தின் வரலாற்றில் இவர்கள் இருவர் பெயர்களையும் தவிர்க்கவே முடியாது என்பதே நிதர்சனமான உண்மை.

**– வெற்றிச்செல்வன்**